1996 ஆகஸ்ட் 7]

என்பதையும் தெரிவித்து, இதிலே ஏதாவது சலுகைகள் அளித்து புதிய வீடுகள் கட்ட இயலுமா என்பதைக் கேட்டிருக்கிறார்கள். இந்த வீடுகள் கட்டப்பட்ட இடம் களர் மண், கரிசல் மண் இடத்திலே கட்டப்பட்ட காரணத்தால் அஸ்திவாரம் சரியாக இல்லை. அதேபோல, பனைமரக் கட்டைகளால் வேயப்பட்ட ஓடுகள் போடப்பட்ட காரணத்தினால், வீடு விழுந்துவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், கட்டுமானத்திற்காகப் பொறுப்பேற்ற அதிகாரிகள், கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அனைவரின்பேரிலும் அது சம்பந்தமாக 'சார்ஜ்' போடப்பட்டு, அந்த வழக்கு ஒரு பக்கம் நிலுவையிலே இருக்கின்றது. இது கைத்தறித் துறையினுடைய கட்டுமானப் பிரிவினரால் கட்டப்பட்டது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு ஒரு புதிய மதிப்பீடு இப்போது தயார் செய்யப்பட்டு 512 வீடுகள், 8 சங்கங்களினுடைய உறுப்பினர்களுடைய நிலையைக் காக்கின்ற அளவிற்கு நிச்சயமாக ஆலோசிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, பழைய வீடுகளுக்குப் பதிலாக, புதிய வீடுகள் கட்டுவது பற்றிய ஆலோசனை இப்போது பரிசீலனையில் இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டாரே. உட்காருங்கள்.

வினா எண் 121, திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

121—

வன உயிரினங்களைப் பாதுகாத்தல்

** 967—* **திரு. மு.க. ஸ்டாலின் :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வன உயிரினங்களைப் பாதுகாக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மொத்த வனப்பரப்பில் 12.48 சதவிகிதம் வனப்பகுதி உயிரினப் பாதுகாப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும், இச்சரணாலயங்களில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களிடையே வனவிலங்குப் பாதுகாப்புக் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வனவிலங்கு வாரம் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. வனவிலங்குகள் தொடர்பான குற்றங்கள் இழைப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. யானைத் தந்தம், புலித்தோல், பாம்புத் தோல், நரித்தோல், அரிய ஆமைகள் போன்றவற்றின் வணிகங்களை அடியோடு தடை செய்யப்பட்டு வனவிலங்குகள் இப்போது பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு.க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வன உயிரினங்கள் சரணாலயங்கள் எத்தனை உள்ளன? அவை எங்கெங்கு இருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 14 வன உயிரின சரணாலயங்களும், 5 தேசிய பூங்காக்களும், நீலகிரி மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதியில் 2 உயிரின வாழ்க்கைச் சூழல் காப்பகமும் ஏற்படுத்தப்பட்டு வன உயிரினங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ.ஜி. சம்பத்.

திரு. ஏ.ஜி. சம்பத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலைக்காட்டிலே இருக்கின்ற வன விலங்கு சரணாலயத்திற்கு ஏற்கனவே இருக்கின்ற பெயரை நீக்கிவிட்டு நல்ல தலைவர்களின் பெயரை அங்கே சூட்டுவதற்குரிய வழிமுறைகளை அரசு நடைமுறைப்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய அரிய ஆலோசனை இந்த அரசால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சிங்காரவேலு.

திரு. வி.பி. சிங்காரவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன உயிரினங்களைப் பாதுகாக்கின்றது நம்முடைய அரசு இந்த வன

1996 ஆகஸ்ட் 7]

உயிரினங்களால் எஸ்டேட் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் ; வன விலங்குகள் காட்டிலிருந்து குடியிருப்புப் பகுதிகளுக்கு வருவதால் நாள்தோறும் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் ஏற்படுகிறது. ஆகவே, மக்களைப் பாதுகாக்க அரசு தக்க முறையில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனவிலங்குகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்க அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு.க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் கோவை மாவட்டம் வால்பாறையில் யானை ஒன்று தனியார் கடையிலே புகுந்து 13 வயது சிறுவனை மிதித்துக் கொன்று இருக்கிறது. இந்தச் செய்தி பத்திரிகையில் எல்லாம் வந்திருக்கிறது. இதுபோன்ற சம்பவங்களுக்கு அரசு என்ன நிவாரணம் வழங்குகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை யானை அல்லது வேறு மிருகங்களால் இறந்தால் அரசாங்கம் ஈட்டுத்தொகையாக 5,000 ரூபாய்தான் கொடுத்து வந்திருக்கிறது. இந்தத் தொகை மிகவும் குறைவானது என்று எல்லோரிடமிருந்தும் விண்ணப்பம் வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்துகொண்டு வனத்துறை மானியக் கோரிக்கையின்போது இந்தத் தொகையை அதிகரிப்பது பற்றி முடிவுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 122, மாண்புமிகு உறுப்பினர் கே.சி. கணேசன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

122—

இருபாலருக்கும் சத்துணவுத் திட்டத்தில் வேலை

* *2073*—**திரு. கே.சி. கணேசன் :**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—